# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (சித்திரை-வைகாசி) மே 2012 ஏர்-27, உழவு-05, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744
செல் : 9381545452

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351744
Cell : 93815 45451

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

தலைவர் : பரணி கே.பாலசுப்பிரமணி
துணைத்தலைவர்கள் : கே.ஏ.கணபதி
பி.சென்னியப்பன்
செயலாளர் : ஆர். செல்வராஜ்
இணைச்செயலாளர்கள்: எஸ்.ஆர்.இராஜேந்திரன்
Dr.கே.ஆர்.பி.சண்முகம்
பொருளாளர் : கே.கே. ரமேஷ்
தணிக்கையாளர் : ஆர். பாலச்சந்திரன்

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | எம்.எஸ்.சங்மேஸ்வரன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| ஆர். சண்முகவேல் | எம்.அமராபதி |
| எம். கார்த்திக் | எஸ்.அன்பழகன் |
| வி.பி.வீரப்பன் | சி.சர்வராஜன் |
| ஆர்.இளங்கோ | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| பி.ரவி | கே.என்.தர்மராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| எஸ்.சிவசாமி | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்

| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| கட்டிட நிதி | - | 3 |
| வேண்டுகோள் | – | 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – | 5 |
| குடும்பவிழா 2012 | – | 6 |
| என்றும் நலமுடன் வாழ | - | 7 |
| 257வது பிறந்த நாள் விழா | - | 10 |
| நிதிநிலை அறிக்கை 2012 | - | 12 |
| தீரன் சின்னமலை பிறந்த விழா | - | 15 |
| வாழ்த்துகிறோம் | – | 19 |
| வெற்றிப்படிகள் | - | 21 |
| மணமகள் தேவை | - | 24 |
| மணமகன் தேவை | - | 26 |
| மணமகள் தேவை | - | 28 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு, வணக்கம்.



இந்திய விடுதலைப் போராட்டத்தில் கொங்கு நாட்டின் முதல் சுதந்திரப் போராளி மாவீரன் தீரன் சின்னமலையைத் தூக்கிலிட்ட இடமான சங்ககிரியில் தமிழக அரசு சார்பில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த நினைவுச்சின்னம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பில் இதயங்கனிந்த நன்றியைச் சமப்பிர்க்கிறோம்.

தீரன் சின்னமலையின் 257வது பிறந்த நாளான 17-04-2012 அன்று கிண்டியில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த மத்திய, மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சான்றோர்கள் மற்றும் கொங்குச் சொந்தங்களுக்குச் சங்கம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. திரளான கொங்குச் சொந்தங்கள் கலந்துகொண்ட போதிலும், சென்னை கொங்கு சொந்தங்கள் குறைந்த அளவில் இருந்தனர் என்பதை வருத்தத்துடன் குறிப்பிட்டாக வேண்டும். நாட்டுக்காக இன்னுயிர் ஈந்த கொங்கு நாட்டுத் தியாக மறவனுக்கு மரியாதை செய்வதைக் கடமையாக கொள்வோம் !

தீரன் சின்னமலையின் தியாகத்தையும், புகழையும் போற்றும் வகையில் தலைநகர் சென்னையில், தீரன் சின்னமலை மாளிகை அமைந்துள்ள பீட்டர்ஸ் சாலைக்கு தீரன்சின்னமலை சாலை எனப்பெயர் மாற்றம் செய்திட வேண்டும் என்ற வேண்டுகோளை பணிவன்போடு தமிழக அரசுக்கு வைக்கிறோம்.

23–04–2012 முதல் மத்திய அரசு சாதிவாரிக்கணக்கெடுப்பைத் தொடங்கியுள்ளதை அறிவீர்கள். கொங்கு வேளாளர் சமுதாய மக்களின் எண்ணிக்கை நீண்டகாலமாக குறைத்தே மதிப்பிடப்பட்டு வருகிறது. எனவே இப்போது எடுக்கப்பட்டுவரும் சாதிவாரிக்கணக்கெடுப்பு நமது சமுதாயத்திற்கு நல்ல வாய்ப்பாக அமையும். கொங்கு வேளாளர் சமுதாய மக்கள் அனைவரும் உட்பிரிவுகளைத் தவிர்த்து '**கொங்கு வேளாளர்**' என்றே பதிவு செய்ய வேண்டியது அவசியம். நமது சமுதாயத்தின் பலத்தை அரசக்குக்காட்டிட, நமது சமுதாயத்தைப் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட, நம் சமுதாயத்தில் விவசாயத்தை நம்பி அல்லும் பகலும் உழைத்தாலும் போதிய வருமானமின்றி பொருளாதாரத்திலும், வாழ்க்கைத்தரத்திலும் மிகவும் பின்தங்கியுள்ள, பெரும்பான்மையோர் ஏற்றம் பெற்றிட கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் உரிய ஒதுக்கீடு பெற்றிட இந்தச் சாதிவாரிக் கணக்கெடுப்பு பயன்படும்.

எனவே உட்பிரிவுகளைத் தவிர்த்து, இந்தக் கணக்கெடுப்பை முறையாகப் பயன்படுத்தி, நம் சமுதாயத்தினர் அனைவரும் '**கொங்கு வேளாளர்**' என்றே பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 71,46,336 |
| 1581 | | C.ஜெகதீஸ்வரன் | 1,000 |
| 1582 | | N.துரைஅரசு | 1,000 |
| 1583 | 615 | R.பழனிசாமி | 1,000 |
| 1584 | 2716 | P.நல்லசாமி | 1,000 |
| 1585 | 2676 | K.வேலுச்சாமி | 1,000 |
| 1586 | 1839 | M.கொற்றவேல் | 1,000 |
| 1587 | 2772 | V.ராமசாமி | 1,000 |
| 1588 | 2267 | B.நடராஜ் | 1,000 |
| 1589 | 2461 | K.A.கணேஷ் | 1,000 |
| 1590 | | N.நித்தியதேவி LH | 1,000 |
| 1591 | 2673 | K.பாஸ்கர் | 1,000 |
| 1592 | 1825 | P.முத்துசாமி | 1,000 |
| 1593 | 2082 | S.மகாலிங்கம் | 1,000 |
| 1594 | 87 | V.R.கோவிந்சாமி | 1,000 |
| 1595 | 2094 | S.கருப்புசாமி | 1,000 |
| 1596 | 1449 | S.A.ராஜேந்திரன் | 1,000 |
| 1597 | 1449 | R.தீபீகா | 1,000 |
| 1598 | 3124 | வசந்தம் C.K.ராமசாமி | 1,000 |
| 1599 | 0142 | T.முத்துக்குமார் | 1,000 |
| 1600 | 992 | M.சுப்பிரமணியம் | 1,000 |
| 1601 | 1484 | M.சேகர் | 1,000 |
| 1602 | | K.சின்னசாமி | 1,000 |
| 1603 | | P.கௌரிபிரியா LH | 1,000 |
| | | மொத்தம் | 71,69,336 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்து வரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பாத உறுப்பினர்கள் இனியும் காலம் தாழ்த்தாது உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'தீரன் சின்னமலை மாளிகை' கட்டிட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதால், கட்டிட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்புமாறு வலியுறுத்திக் கேட்டுகொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**

நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :

Name / பெயர் :

Father's Name / தகப்பனார் பெயர் :

Date of Birth / பிறந்த தேதி :

Edu. Qualification / கல்வித்தகுதி :

Occupation / தொழில் :

Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# 2012 ஆம் ஆண்டுக்கான, சாதனையாளர் விருது மற்றும் இளம் சாதனையாளர் விருது

சங்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெற உள்ள 50ம் ஆண்டு நிறைவு குடும்பவிழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமைதேடித்தந்துள்ள சாதனையாளர்களுக்கு " கொங்கு சாதனையாளர்" விருதும், படித்துக்கொண்டு இருக்கும் போது தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு 'கொங்கு இளம் சாதனையாளர்' விருதும் வழங்கப்பட உள்ளன. இந்த ஆண்டு குடும்ப விழா காமராஜர் அரங்கத்தில் 02-09-2012 அன்று நடைபெற உள்ளது. 2012 ஆம் ஆண்டிற்கான 'கொங்கு சாதனையாளர்' விருது மற்றும் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்குவதற்குப் பரிசீலனை செய்திட, தங்களுக்குத் தெரிந்த தங்கள் பகுதியைச் சார்ந்த சாதனையாளர்களின் விபரங்களைப் புகைப்படத்துடன் சங்க அலுவலகத்திற்கு ஜுலை 31ம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு சங்க உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ஆர்.செல்வராஜ், செயலாளர்

❖❖❖❖❖

# 10 மற்றும் +2 மாணவர்களுக்குப் பணமுடிப்பு, பதக்கம்

2012 ஆம் ஆண்டு 02-09-2012 அன்று நடைபெறவிருக்கும் குடும்பவிழாவில் இவ்வருடம் 10ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ள முதல் மூன்று கொங்குச் சமுதாய மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிப்பதக்கமும், பணமுடிப்பும் வழங்கப்படும். விழாவிற்கு வந்துபோக பயணக்கட்டணம், தங்கும் வசதி போன்றவை அளிக்கப்படும். தகுதியுடைய மாணவ, மாணவியர் சங்கத்திற்கு ஜுலை 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்துடன் சமுதாயச் சான்றிதழ் நகல், மதிப்பெண் பட்டியல் நகல், புகைப்படம் ஆகியவை கட்டாயம் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

- ஆர்.செல்வராஜ், செயலாளர்


❖❖❖❖❖

# என்றும் நலமுடன் வாழ

## கை, கால்களில் நடுக்கம் ஏன்

பத்மஸ்ரீ கொங்குமாமணி டாக்டர் வி.எஸ்.நடராஜன்
முதியோர் மருத்துவர்

**அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு**



வணக்கம், "நான் சுமார் ஓர் ஆண்டுக்கு முன்பு சேலத்திலிருந்து வந்து உங்களைச் சென்னையில் சந்தித்து சிகிச்சைப் பெற்றுக்கொண்டேன். நீங்கள் என் போன்ற பல முதியவர்களுக்கு சிகிச்சை செய்து வருவதால் என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்க வாய்ப்பு இல்லை, ஆனால் எனது தொல்லைகள் பற்றியும் அதற்கு நீங்கள் அளித்த சிகிச்சை பற்றியும் நான் எழுதினால் நீங்கள் என்னைப் புரிந்து கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்.

என் பெயர் கிருஷ்ணசாமி; வயது **68.** கடந்த சில ஆண்டுகளாக என் கைகளில் லேசாக நடுக்கம் ஏற்பட்டது. இதனால் பெரிய தெல்லை ஏதும் இல்லையானாலும் எனது கையெழுத்து மாறுபடுவதால் நான் அனுப்பும் செக்குகள் வங்கியிலிருந்து திரும்புகின்றன. நான் மேனேஜரை நேரில் சென்று எனது குறையை எடுத்துரைத்தும் அதை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. நீங்கள் உங்களுடைய கை நடுக்கத்திற்கு தக்க வைத்தியம் செய்து கொள்ளுங்கள் அல்லது டாக்டரிடம் இருந்து ஒரு மருத்துவச் சான்றிதழ் வாங்கி அனுப்புங்கள் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். எனது பென்ஷன் தொகையைக் கூட தேவைப்படும் போது சுலபமாக எடுக்க முடியாத சூழ்நிலையில்தான் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டு சென்னைக்கு வந்தேன்.

நீங்கள் என்னைப் பொறுமையாகப் பரிசோதனை செய்து, என் நடுக்கம் நோயினால் வருவதில்லை என்று எனக்குத் தைரியம் ஊட்டினீர்கள். இது **60** வயதைத் தாண்டிய முதியவர்களுக்கு சாதாரணமாக வரும் கை நடுக்கம் தான். சில மருந்துகளைக் கொடுத்ததோடு, 'இந்த மருந்துகளைச் சாப்பிட்டு வாருங்கள்; உங்கள் கை நடுக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்' என்று கூறி என்னை அனுப்பி வைத்தீர்கள்.

சில மாதம் கழித்து என் கை நடுக்கத்தில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. அதாவது நான் எழுதும் செக் திருப்பி அனுப்பப்படுவதில்லை ! இதை விட எனக்கு வேறு என்ன

மகிழ்ச்சி வேண்டும்? என் கையெழுத்தை நீங்கள் பார்த்து மனம் திருப்தியடைய வேண்டும் என்பதற்காகவே இக்கடிகதத்தை நான் என் கைப்பட உங்களுக்கு எழுதுகிறேன்.

நடுங்காத கைகளில் எழுதிய கடிதத்தின் மூலம் எனது நன்றியினை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்".

**கை, கால்கள் நடுக்கம் என்பது முதுமையில் மட்டும் வரக்கூடிய தொல்லையா ?**

இத்தொல்லை எந்த வயதிலும் வரலாம். ஆனால் 60 வயதைத் தாண்டியவர்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

வயதான காலத்தில் கை, கால்களில் நடுக்கம் ஏற்பட்டால் அது முதுமையின் விளைவே என்று எண்ணி டாக்டரிடம் செல்வது இல்லை, சில சமயங்களில் டாக்டர்கள் கூடஇத்தொல்லைகளுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது இல்லை.

கை, கால்கள் நடுக்கத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. சாதாரண நடுக்கம் - இது முதுமையின் விளைவே (Essential tremor)
2. பல நோய்களினாலும், மருந்துகளினாலும் கை, கால்கள் நடுக்கம் ஏற்படுதல்.

**உதாரணம் :**

1. மது அதிகமாக அருந்துவது
2. மதுவை திடீர் என்று நிறுத்துவது.
3. ஆஸ்துமா மற்றும் மன நோய்களுக்குக் கொடுக்கும் மருந்துகள்
4. தைராய்டு சுரப்பி அதிகமாகச் சுரத்தல் (Hyper thyroidism)
5. சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செயலிழத்தல்
6. நரம்பு சார்ந்த நோய்கள் - உதறுவாதம் (Parkinsonism)

**உதறுவாதம் பற்றிச் சற்று விபரம் தேவை**

இத்தொல்லை திடீரென்று வருவதில்லை, பல மாதங்கள், பல வருடங்களில் இத்தொல்லை மெதுவாக ஆரம்பித்து, தொடர்ந்து அதிகமாகிக்கொண்டு போகும். நடுக்கம் முதலில் கையில் ஆரம்பிக்கும், அதாவது உணவு உண்ணும் போது நடுக்கம், பின்பு தலையில் நடுக்கம் ஏற்படும், நாளடைவில் குரலையும் பாதிக்கும் அதாவது பேச்சு தொடர்ச்சியின்றி விட்டுவிட்டுப் பேசுவதாக இருக்கும். கைகளைச் சாதாரணமாக வைத்து இருக்கும்போது நடுக்கம் ஏதும் இருக்காது. ஆனால் இரண்டு கைகளையும் முகத்திற்கு முன்பு நீட்டி விரல்களைப் பிரித்து வைக்கும்போது நடுக்கம் தோன்றும்.

இந்நோயை முழுமையாக குணப்படுத்த முடியாது. ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் மேலும் பரவாமல் கட்டுப்படுத்த முடியும். இதற்குப் பலவிதமான மருந்துகள் உண்டு. ஆனால் அந்த மருந்தின் பக்க விளைவுகள் சில சமயங்களில் நோயை விட அதிகமாக இருக்கும். ஆகையால் இதற்கான மருந்தை மிக்க கவனத்துடன் கொடுக்கவேண்டும்.

**முதுமையில் ஏற்படும், கை கால்நடுக்கத்திற்கு தக்க சிகிச்சை இல்லை என்று கூறுகிறார்களே, இது உண்மையா ?**

தவறு. தக்க சிகிச்சை உண்டு. முதலில் முதுமையில் கை, கால் நடுக்கம் எதனால் வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். நோய்கள் மற்றும் மருந்துகள் மூலம் நடுக்கம் வந்தால் அதற்கு தக்க சிகிச்சை அளிக்க வேண்டும். முதுமையில் நடுக்கம் வருவதற்கு எந்தக் காரணமமும் தெரியவில்லை என்றால் அது வயதான காலத்தில் ஏற்படும் நடுக்கம் என்று அதற்கான சிகிச்சையை அளிக்க வேண்டும்.

**சிகிச்சை முறைகள் :**

முதலில் முதியோர்களுக்கு இந்த நடுக்கத்தைப் பற்றி விவரமாக எடுத்துக்கூறி மனதில் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும், உண்டாக்க வேண்டும். முக்கியமாக இது (Parkinsonism) உதறுவாதம் போன்ற ஒரு கொடிய நோய் அல்ல என்று எடுத்துரைக்க வேண்டும்.

லேசான நடுக்கத்திற்கு மருந்து எதுவும் தேவைப்படாது.

சிறிதளவு மது அருந்தினால் நடுக்கம் குறைந்து விடும். ஆனால் இதையே தொடர்ந்து செய்துவந்தால் மதுவுக்கு அடிமையாக வாய்ப்பு உண்டு. ஆகையால் தேவைப்படும் நேரங்களில் சிறிது மது அருந்துவதில் தவறு ஒன்றுமில்லை.

கை நடுக்கத்தைக் குறைப்பதற்கு என்றே தனியாக மாத்திரைகள் உண்டு

உதாரணம் : Beta Blockers மற்றும் வலிப்புக்குக் கொடுக்கும் மாத்திரைகள்

வயதான காலத்தில் உண்டாகும் நடுக்கத்தைப் பற்றி கவலை வேண்டாம். முதுமையின் விளைவு என்று அலட்சியப்படுத்தவும் வேண்டாம். இந்த நடுக்கத்திற்கும் சிகிச்சை உண்டு. !

தொடரும்....

❖❖❖❖❖

# தீரன் சின்னமலை 257வது பிறந்த நாள்விழா



இந்திய விடுதலைப்போரில் வெள்ளையர்களை நாட்டைவிட்டே ஓட்ட வேண்டுமெனக் கொதித்தெழுந்து மூன்று போர்களில் வெற்றி கொண்டவரும், கொங்கு நாட்டின் முதல் சுதந்திரப் போராளியும், தன்னுடைய, வாழ்வை துச்சமென மதித்து ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தடுக்கும் பெருமலையாக விளங்கித் தன் இன்னுயிரை ஈந்த தியாகச் செம்மலுமான கொங்கு மாவீரன் தீரன் சின்னமலையின் 257 ஆவது பிறந்த நாள் விழா 17-4-2012 அன்று சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பில் மிகச்சிறப்பாகச் கொண்டாடப்பட்டது.

தீரன் சின்னமலையின் தியாகத்தைப் போற்றும் வகையில் கிண்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்திட சங்க உறுப்பினர்கள் மற்றும் கொங்குச் சமுதாய மக்கள் பெருமளவில் 17-4-2012 அன்று காலை 8.30 மணிக்கு வரவேண்டும் என்று சங்கத்தின் சார்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, காலை 7.30 மணியிலிருந்தே கொங்குச் சொந்தங்கள் சிலையருகே குழும ஆரம்பித்தனர்.

கொங்குமாவீரன் சின்னமலைக்கு, அவர் தூக்கிலிடப்பட்ட இடமான சங்ககிரியில் ஒரு நினைவுச் சின்னத்தை தமிழக அரசு அமைத்திட வேண்டும் என்பது நமது சங்கத்தின் நீண்டகாலக் கோரிக்கை. 4/4/42012 அன்று சட்டமன்றத்தில் சங்ககிரியில் தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னம் விரைவில் அமைக்கப்படும் என தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக நிகழ்ச்சிக்கு வந்திருந்த கொங்குச் சொந்தங்கள் அனைவரும் உற்சாகத்துடனும், உவகையுடனும் காணப்பட்டனர்.

முன் எப்போதும் இல்லாத வகையில், இந்த ஆண்டு மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித்தலைவர்கள், தமிழறிஞர்கள், அரசு அலுவலர்கள் முதலானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு

கொங்கு மாவீரன் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் சார்பில் தலைவர் திரு. பரணி கே.பாலசுப்பிரமணி, செயலாளர் திரு. ஆர்.செல்வராஜ் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் திருவுருவச்சிலைக்கு மலர்மாலைகள் சூட்டி மரியாதை செய்தனர். பின்னர் நிகழ்ச்சிக்கு வந்த அமைச்சர் பெருமக்கள், சான்றோர்கள் ஆகியோரை வரவேற்று அவர்கள் மாலை அணிவித்து மரியாதைசெய்யும்போது உடனிருந்து மகிழ்ந்தனர்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.கே.ஏ.செங்கோட்டையன், திரு. பி.பழனியப்பன், திருமதி கோகுல இந்திரா, திரு.கே.வி.இராமலிங்கம், திரு.செந்தில்பாலாஜி, திரு.எடப்பாடி பழனிசாமி, திரு.எஸ்.எம்.எஸ்.ஆனந்தன், திரு.பி.தங்கமணி, திரு. டி.எம்.டி. சின்னையா, சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி, மேயர் வேலுசாமி, பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் திரு. பொன். இராதாகிருஷ்ணன், கொங்கு நாடு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. பெஸ்ட். எஸ். இராமசாமி, பொதுச்செயலாளர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன், பொருளாளர் திரு.கே.பாலசுப்பிரமணியன், கொங்கு இளைஞர் பேரவைத்தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு.தனியரசு, திரு.மணிகவுண்டர், திரைப்பட இயக்குநரும், நாம் தமிழர் இயக்கத்தலைவருமான திரு.சீமான், தமிழ்நாடு காவல்துறை முன்னாள் கூடுதல் இயக்குநர் திரு.வி.சிபெருமாள் IPS, திரைப்படகலைஞர், சொற்பொழிவாளர் திரு.சிவக்குமார், தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார், சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. அப்பாவு முதலானோர் தீரன் சின்னமலையின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள். சென்னையிலிருந்து மட்டுமல்லாமல் கொங்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திரளான கொங்குச் சொந்தங்கள் இந்தப் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடக்கத்தது.

கிண்டி தொழிற்பேட்டைப் பகுதி விழாக்கோலம் பூண்டிருந்தது. சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மாளிகையிலும் அவருடைய திருவுருப்படத்திற்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்க நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

❖❖❖❖❖

# மத்திய நிதிநிலை அறிக்கை 2012

## சில சிறப்பு அம்சங்கள்

வீ.எஸ்.கந்தசாமி, அய்.ஆர்.எஸ் (ஓய்வு)
உதவி வருமான வரி ஆணையர் (ஓய்வு)

இந்த ஆண்டு நிநிநிலை அறிக்கையில் நேர்முக வரி பற்றிய 108 திருத்தங்கள் உள்ளன. அவற்றுள் தனிநபர் கருத்தில் கொள்ளவேண்டிய மிக முக்கியமான அம்சங்களைக் கீழே காணலாம்.

**வருமான வரி விலக்கு வரம்பு**

வருமான வரி விலக்கு வரம்பு ரூ. 1,80,000/- ஆக இருந்தது. இந்த ஆண்டு முதல் ரூ. 2,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பணவீக்கத்தாலும், விலைவாசி உயர்வினாலும் வருமான வரி விலக்கு வரம்பு ரூ. 3,00,000/- ஆக உயர்த்தப்படும் என்று எதிர்பார்த்தது நடக்கவில்லை, மகளிரைப் பொறுத்தவரையில், இப்போதே அவர்களுக்கு வருமான வரி விலக்கு வரம்பு ரூ. 1,90,000/- ஆக உள்ளது. ஆகவே அவர்களுக்கு உச்சவரம்பு உயர்த்தப்பட்டதால் அதிகம் பயனில்லை.

**மூத்த குடிமக்கள்**

60 வயதுக்கு மேல், 80 வயதுவரை உள்ள மூத்த குடிமக்களுக்கு, உச்சவரம்பு 2,40,000 ஆக இருந்தது. 2,50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**மிக மூத்த குடிமக்கள்**

80 வயதிற்கு மேற்பட்ட மிக மூத்த குடிமக்களுக்கு உச்சவரம்பு ரூ. 5,00,000. இது இந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய அறிவிப்பு ஆகும்.

மூத்த குடிமக்களுக்கான வயது வரம்பு இதுவரையில் 65 ஆக இருந்தது. இந்த ஆண்டு முதல் 60 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**வருமானமும் வரி விகிதமும்**

| வருமானம் (ரூபாய்) | வரி விகிதம் |
|---|---|
| 2,00,000 | வரியில்லை |
| 2,00,001 - 5,00,000 | 10% |
| 5,00,001 - 10,00,000 | 20% |
| 10,00,001 க்குமேல் | 30% |

வங்கியில் உள்ள சேமிப்புக் கணக்கு, அஞ்சலக சேமிப்புக் கணக்கு, கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள கணக்குகளில் இருந்து பெறும் மொத்த வட்டித் தொகையில் ரூ. 10,000 த்திற்கு வரி இல்லை.

உற்பத்தி ஆயத்தீர்வை 10% ஆக இருந்தது 12% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால் நுகர்வோர் பயன்பாட்டுப் பொருள்களான குளிர்சாதனப் பொருள்கள், குளிரூட்டிகள், சலவை இயந்திரம் ஆகியவற்றின் விலை உயரும். கையினால் சுற்றப்படும் பீடி, வெண்சுருட்டு, சுருட்டு, வாயில் குதப்பும் புகையிலை ஆகியவற்றிற்கும் 2% ஆயத் தீர்வை அதிகப்படுத்தப்பட்டுள்ளது. அழகு சாதனப்பொருட்கள், கைக்கடிகாரங்கள், சோப்புகள், இருசக்கர வண்டிகள், கார்கள், லாரிகள் ஆகியவற்றிற்கான வரி உயர்த்தப்பட்டுள்ளதால் இவற்றின் விலையும் உயரும்.

**தங்கநகைகளுக்கு ஆயத் தீர்வை**

ரூ. 2,00,000 க்கும் அதிகமாகத் தங்கநகைகள் வாங்கும் போது, 1% ஆயத்தீர்வை செலுத்தவேண்டும்.இதுவரையில் பிரபலமான குறியீடுகள் பொறிக்கப்பட்ட தங்கநகைகள் வாங்கினால் மட்டுமே செலுத்தவேண்டியிருந்த மேற்படி வரி, இந்த ஆண்டு முதல் எந்த நகை வாங்கினாலும் செலுத்தவேண்டும்.

**அசையாச் சொத்து விற்பனையில் வரிப்பிடித்தம்**

ஒருவர் வாங்கும் அசையாச் சொத்தின் மதிப்பு ரூ. 20,00,000 த்திற்கும் அதிகமாக இருந்தால், அவர் அதன் விற்பனைத் தொகையில் இருந்து 1% வரிப்பிடித்தம் செய்து கட்டவேண்டும். சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற பெரும் தலைநகர்களில் உள்ள அசையாத் சொத்துக்களின் மதிப்பு, ரூ. 50,000,000 த்திற்கும் அதிகமாக இருந்தால் மட்டுமே அவற்றின் விற்பனைத் தொகையிலிருந்து வரிபிடித்தம் செய்து கட்டவேண்டும். இவ்வாறு வரி பிடித்தம் செய்ததற்கான ஆதாரத்தைப் பதிவாளரிடம் காட்டிய பிறகே, விற்பனைப் பத்திரம் பதிவு செய்யப்படும்.

**வேளாண்மை**

விவசாயத்திற்கான மானியம் நேரடியாக விவசாயிகளுக்கே வழங்கப்படும். விவசாயிகளின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் இந்த மானியத்தொகை நேரடியாகச் சேர்க்கப்படும். முதல் கட்டமாக, 50 மாவட்டங்களில் இது முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும்.

**அறக்கட்டளைகள்**

ஏதாவது ஒரு பொது நலனை மட்டுமே நோக்கமாகக் கொண்ட அறக்கட்டளை, அந்த நோக்கம் தவிர்த்த வேறு ஏதாவது வாணிபத்தில் ஓர் ஆண்டு ஈடுபட்டு, அந்த வாணிபத்திலிருந்து அந்த ஆண்டு, ரூ.25,00,000 த்திற்கும் அதிகமான தொகை கிடைத்தால், அந்த அறக்கட்டளைக்கு அளிக்கப்பட்ட வரி விலக்கு அந்த ஆண்டுக்கு ரத்து செய்யப்படும். ஆயினும், அறக்கட்டளை என்ற தகுதி அதற்குத் தொடர்ந்து நீடிக்கும். அந்த அறக்கட்டளைக்கு அடுத்த ஆண்டில் அவ்வணிகத்திலிருந்து மேலே கூறிய தொகைக்கும் குறைவான தொகை மட்டுமே கிடைத்தால், வரி விலக்கு மீண்டும் கிடைக்கும்.

**சேவை வரி**

சேவை வரி 10% ஆக இருந்தது, 12% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**செயல்பாடு**

**வெளிநாட்டில் சொத்து மற்றும் முதலீடு**

நம் நாட்டில் உள்ள ஒருவருக்கு, வெளிநாட்டில் சொத்து இருந்தாலும் அல்லது அவர் வெளிநாட்டில் ஏதாவது முதலீடு செய்திருந்தாலும், அவற்றிலிருந்து வருமானம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் அவர் வருமான வரி நமூனா கட்டாயம் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் நிதிநிலை அறிக்கையின் நோக்கம், நாட்டின் வளர்ச்சிக்குத் திட்டமிடுவதும், தொழில்களை ஊக்குவிப்பதும், தனிமனித மேம்பாட்டிற்கு வழிவகை செய்வதுமாகும். நம் நாட்டில் இந்த நோக்கங்களுடன் மற்றொரு முக்கியமான நோக்கம், கறுப்புப் பணத்தைத் கண்டுபிடிக்கத் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகும். நிதிநிலை அறிக்கை மூலாக ஒவ்வொரு ஆண்டும் நேர்முகவரிச் சட்டங்களில் பல திருத்தங்கள் இதற்காகக் கொண்டுவரப்படுகின்றன. ஆயினும், ஆண்டுக்கு ஆண்டு கறுப்புப்பணத்தின் அளவு வேகமாகப் பெருகிக்கொண்டே போகிறது. கறுப்புப் பணத்தை முதலீடு செய்து நடைபெறும் வாணிபத்திலிருந்து கிடைக்கும் வருமானமும் கணக்கில் காட்டப்படுவதில்லை. நம் நாட்டின் தேசிய வருமானத்தில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ. 20,00,000 கோடிக்கு வரி செலுத்தப்படுவதில்லை

ரூ, 2,60,000 கோடி வருமான வரி பாக்கியாக உள்ளது. இதில் ரூ. 70,000 கோடி வருமான வரிக்கு எவ்வித வழக்கும் சர்ச்சையும் இல்லை. நிர்வாகச் சீர்கேடும், அலுவலர்களின் பொறுப்பற்ற தன்மையுமே இதற்குக் காரணம். பல ஆயிரம் கோடி வரி ஏய்ப்புச் செய்தவர்கள் பெரும்பாலும் அரசியல் செல்வாக்குள்ளவர்களாவே கண்டறியப்பட்டுள்ளார்கள்.

இதைத் தவிர, வெளிநாட்டில், இந்தியர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை நம் நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒவ்வோர் ஆண்டும் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படுகின்றது. ஆயினும், பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் பணம் இதுவரையில் நம் நாட்டிற்கு வந்து சேரவில்லை. இது ஒருபுறமிருக்க, 27 விழுக்காடு பணம் இதுவரையில் நம் நாட்டிற்கு வந்து சேரவில்லை. இது ஒருபுறமிருக்க, 27 விழுக்காடு மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளார்கள் என்று அரசே ஒப்புக்கொண்டுள்ள நம்நாட்டில், ஆண்டு தோறும் ரூ. 50 கோடி மதிப்புள்ள உணவுத் தானியங்கள் சேமிப்புக் கிடங்குகள் இல்லாததால் விணாகின்றன.

தொலைபேசி : 044-28475086
9543539773

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



13–04–2012 அன்று சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்ப்புத்தாண்டு விழாவில் தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்டு சாதனை படைத்துள்ள தமிழறிஞர்களுக்கு உ.வே.சா.விருது, அவ்வையார் விருது, கபிலர் விருது, தமிழ்த் தாய் விருது ஆகிய விருதுகளை வழங்கி கௌரவித்தார். இந்த நான்கு பெருமைமிகு விருதுகளும் இந்த ஆண்டுதான் நிறுவப்பட்டு தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டன.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொல்லியல்-கல்வெட்டுத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவரும், கல்வெட்டுத் துறையில் மிகச்சிறந்த ஆராய்ச்சியாளர்களில் ஒருவராக விளங்குபவரும், கொங்கு வேளாளர் குலங்கள், வேளாளர் வரலாறு, வட்டார, ஊர், வரலாறுகள், காலிங்கராயன் வரலாறு, தீரன் சின்னமலை வரலாறு முதலான எண்பத்தொன்பது (89) அருமையான நூல்களை எழுதிக் கொங்குநாட்டுக்குக் கொடையாக கொடுத்துள்ளவரும், தன்னுடைய அயரா உழைப்பாலும், ஆற்றலாலும், தனித்திறமையாலும் நிகழ்த்திய சாதனைகளுக்குப் பல்வேறு விருதுகளையும், பட்டங்களையும், பாராட்டுகளையும் பெற்றுள்ளவருமான பேராசிரியர் புலவர் செ.இராசு அவர்களுக்கு தமிழக முதல்வர் ‘உ.வே.சா. விருது’ வழங்கியதோடு, ரூபாய் ஒரு இலட்சம் பொற்கிழியும் அளித்துப் பாராட்டியுள்ளார்.

நமது சங்கம் சிறப்புமிகு ‘கொங்கு மாமணி’ விருதை புலவர் செ.இராசு அவர்களுக்கு ஏற்கனவே வழங்கிச் சிறப்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கொங்கு ஆய்வு மைய அமைப்பாளரான இவர் பல்வேறு மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு இதுவரை தமிழில் 357 ஆய்வுக்கட்டுரைகளையும், ஆங்கிலத்தில் 15 ஆய்வு கட்டுரைகளும் எழுதிப் பெருஞ்சாதனை படைத்துள்ளார்.

தமிழக அரசின் ‘உ.வே.சா. விருது’ பெற்றுள்ள பேராசிரியர் புலவர் செ.இராசு அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது. உ.வே.சா. விருதை முதன் முதலாகப் பெற்றுள்ள பெருமையுடைய புலவர் செ.இராசு அவர்கள் மேலும் பல உயர்ந்த விருதுகளைப் பெற்றிட சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



செல்வி. ஐஸ்வர்யா ஆனந்த் அகில இந்திய அமைப்பான பாரத் விகாஸ் பரிஷத் நடத்திய சி.பி.எஸ்.சி. பள்ளிகளுக்கான 'பாரத் கோ ஜானோ' என்னும் வினாடி வினா போட்டியில் மாவட்ட மற்றும் மாநில அளவில் முதல் பெற்று சாதனை படைத்துள்ளார். கடந்த ஜனவரி 7,8 தேதிகளில் ஹரித்வாரில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டியில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் சார்பாகப் பங்கேற்று, தென்னிந்திய அளவில் முதல் பரிசைப் பெற்றார். இவர் சென்னை ஏர் இந்தியா நிறுவனத்தில் துணை மேலாளராகப் பணியாற்றும் திரு.வி.எம்.ஆனந்த் - திருமதி சாந்தி ஆனந்த் ஆகியோரது மகளாவார். சொந்த ஊர் ஈரோடு.

சென்னை ஆதம்பாக்கம் டி.ஏ.வி. பள்ளியில் பத்தாம் வகுப்புப் பயின்று வரும் செல்வி ஐஸ்வர்யா ஆனந்த் அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல சாதனைகள் படைக்க வேண்டும் எனச் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



திருச்செங்கோடு கொக்கராயன்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.அ.நல்லசாமி - திருமதி ந.சரோஜா தம்பதியரின் குமாரன் திரு. ந.சசிகுமார் M.S., M.B.A., (Energy Manger, Singapore), திரு. செ.தங்கவேல் – திருமதி சரஸ்வதி மகள் செல்வி கௌதமி ஆகியோரின் திருமணம் 04-03-2012 அன்று திருச்செங்கோடு சி.எச்.பி. காலனியில் அமைந்துள்ள கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நமது சங்கத்தின் முன்னாள் துணைத்தலைவரும், கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளருமான திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் திருமணத்தில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். திரளான கொங்குச்சொந்தங்கள் மண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்தனர்.

புதுமணமக்கள் திரு. ந.சசிகுமார் - திருமதி கௌதமி எல்லாவளமும் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# வெற்றிப் படிகள்

உங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற, கீழே விவரிக்கப்பட்டுள்ள ஏணிப்படிகளில் ஏறுங்கள்.

ஒவ்வொரு படியிலும் கவனமாகவும் விழிப்புணர்வோடும் உங்களின் ஒவ்வொரு அடியையும் எடுத்து வையுங்கள்.

தடைக்கற்களைப் படிக்கட்டுகளாக மாற்றி வாழ்க்கையில் முன்னேறுங்கள். வரலாறு படையுடங்கள்.

**தெளிவான சிந்தனை**

சிந்தனையே செயலாகிறது. செயலே பழக்கமாகிறது. பழக்கமே வாழ்க்கையாகிறது.

ஆகவே உங்கள் சிந்தனையைத் தெளிவு படுத்துங்கள். ஒரு சிந்தனைத் துளி உங்கள் மனதில் உருவாகும்போதே, அது ஏன் உருவாகிறது என்றும், அதைச் செயலாக்கினால் என்ன விளைவு ஏற்படும் என்றும் யோசித்துப் பாருங்கள்.

சிந்தனை ஏற்படுவதற்கான காரணமும் அச்சிந்தனையைச் செயலாக்கினால் ஏற்படும் விளைவும் அனைவருக்கும் நன்மை உண்டாக்கக் கூடியதாக இருந்தால் மட்டுமே அச்சிந்தனையைச் செயலாக்குங்கள்.

**உயர்ந்த இலட்சியம்**

உங்களின் வாழ்க்கையில் எதைச் சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதே இலட்சியம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கொள்கையோடு உங்கள் வாழ்நாளின் ஒவ்வொரு நொடியையும் செலவிட வேண்டும்.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை துடுப்பில்லாத படகைப் போன்றது. அது காற்றுக்கு அசையலாம். ஆனால் இலக்கை அடைய முடியாது.

உங்கள் திறமைக்கும், ஆற்றலுக்கும் உகந்ததாகவும் அடையக் கூடியதாகவும் உங்கள் இலட்சியம் இருக்க வேண்டும்.

உங்கள் இலட்சியமே வாழ்க்கையை வழிடத்தும் ஒளி விளக்கு, ஆகவே உங்கள் இலட்சியம் என்ன என்பதை உள்மனதில் பதிய வையுங்கள்

தன்னம்பிக்கை

உங்கள் இலட்சியத்தை உங்களால் அடைய முடியும் என்று உள்ளார்த்தமாக நம்புவதே தன்னம்பிக்கை. எதை இழந்தாலும் தன்னம்பிக்கையை மட்டும் இழந்து விடாதீர்கள்.

முடியாது என நினைப்பது மூடத்தனம், முடியுமா என எண்ணுவது அவநம்பிக்கை, முடியும் என முழுமையாக நம்புவதே தன்னம்பிக்கை

ஆகவே உங்களின் திறமையை உணர்ந்து அதை நம்புங்கள்.

உங்களின் ஆற்றலை வளர்த்துக்கொள்வதோடு உங்களின் தற்போதைய நிலைக்கு நீங்களே பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்பட்டால் தன்னம்பிக்கை கூடும்.

**விடாமுயற்சி**

நீங்கள் எடுக்கும் எந்த முயற்சியும் தொடர்முயற்சியாக, விடா முயற்சியாக இருக்க வேண்டும். முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை; வெற்றிக்கு முன்னர் ஓய்வென்பதில்லை என்று செயல்பட வேண்டும்.

முயற்சி செய்வது இயற்கை. முயலாமையே செயற்கை. பிறக்கும்போதே யாரும் சாதனையாளராகப் பிறப்பதில்லை.

தங்களின் புத்திசாலித்தனமான உழைப்பின் மூலமும் விடாமுயற்சியின் மூலமும்தான் ஒவ்வொரு சாதனையாளரும் தடைகளைத் தகர்த்து வெற்றிக் கொடி கட்டியிருக்கிறார்கள்.

இடைவிடாத முயற்சியை இதயத்தில் குடியேற்றினால் முடியாது என்ற சொல்லுக்கே இடமில்லை. தோல்வியும் வெற்றிக்கு முதல் படி; தோல்வியென்பது ஒத்திப் போடப்பட்ட வெற்றி என வெற்றிச் சிகரத்தை அடையும்போது தொடர்ந்து முயன்று கொண்டே இருக்க வேண்டும்.

**நல்ல அணுகுமுறை**

உங்கள் வெற்றிக்கு உங்களைச் சுற்றியுள்ளவர்களின் ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் இருக்க வேண்டும். ஆகவே உங்களைச் சுற்றியுள்ளவர்களின் இதயத்தைக் கொள்ளையிடும் வகையில் உங்கள் அணுகுமுறை இருக்க வேண்டும்.

உங்கள் சொல்லும் செயலும் அவர்கள் தன்னார்வத்துடன் உங்களுக்கு உதவத் தூண்டக்கூடியதாக இருக்க வேண்டும். மூடிய இதயங்களையும் திறக்கக் கூடியதாக உங்கள் அணுகுமுறை இருக்க வேண்டும்.

உங்களின் வார்த்தைகள் மென்மையானதாகவும் இனிமையானதாகவும் இருக்க வேண்டும். மற்றவர்களிடமிருந்து உதவிகளைப் பெற அவர்களுக்கு நீங்கள் முதலில் உதவ வேண்டும். அவர்களிடமுள்ள உண்மையான நற்பண்புகளையும் திறமைகளையும் புகழ்ந்து பேச வேண்டும்.

**சுய திறனாய்வு**

ஒவ்வொரு நாளும் இரவு உறங்குமுன், அன்று காலையிலிருந்து இரவுவரை நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்வையும் விருப்பு வெறுப்பு இல்லாத மனநிலையில் சுய திறனாய்வு செய்துபாருங்கள்.

கடலிலும், ஆகாயத்திலும், பயணம் செய்யும்போது வாகனம் சரியான இலக்கை நோக்கிச் செல்கிறதா என்பதை அறிய, அதை ஓட்டுபவர் திசைமானியை அவ்வப்போது பார்த்துத் தம் வாகனத்தின் திசையைச் சரி செய்து கொள்வதைப்போல, உங்கள் வாழ்க்கைப் பயணம், உங்கள் இலட்சியத்திலிருந்து விலகியிருந்தால், அதை அவ்வப்போது சரிசெய்து கொள்ளச் சுய திறனாய்வு உதவும்.

**நேர நிர்வாகம்**

மணித் துளிகளின் தொகுப்பே வாழ்க்கை. நேரம் என்பது பொன்னல்ல! அது உயிர். உயிரை இழந்தால் திரும்பப்பெற முடியாது. அதுபோல நேரத்தை இழந்தாலும் திரும்பப்பெற

முடியாது.

பணத்தை விரயம் செய்கிறவர்கள் செல்வத்தை மட்டுமே இழக்கிறார்கள். ஆனால் நேரத்தை விரயம் செய்கிறவர்கள் வாழ்க்கையை இழக்கிறார்கள்.

அரட்டையும் குறட்டையும் உங்கள் நேரத்தைத் தின்று தீர்க்க அனுமதிக்காதீர்கள். சோம்பலும் எதற்கெடுத்தாலும் ஒத்திப் போடும் மன நிலையும் உங்கள் நேரத்தை வீணாக்கக்கூடும்.

ஆகவே சுறுசுறுப்பு நெருப்பில் சோம்பலைச் சாம்பலாக்குங்கள். மேலும், நேற்று என்பது உடைந்த பானை; நாளை என்பது மதில்மேல் பூனை; இன்று என்பதே உங்கள் கையிலுள்ள வீணை

ஆகவே, இன்றிலிருந்து செயல் என்கிற இனிய கீதத்தை வாசியுங்கள்.

**திட்டமிட்டுச் செயல்படுதல்**

நீங்கள் எந்தவொரு செயலைச் செய்வதாக இருந்தாலும் அதை எப்படிச் செய்வது எனத் திட்டமிட்டுச் செய்யுங்கள்.

திட்டமிட்டுவிட்டால் அதைச் செயலாக்கம் செய்வது மிகவும் எளிது.

இதைத்தான் ஆங்கிலத்தில் “Failing to plan is planning to fail’ என்கிறார்கள் திட்டமிடுவதில் தோற்றுப்போவதென்பது தோற்றுப்போவதற்குத் திட்டமிடுவது.

**பேச்சுத் திறமை**

பேசும் திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள, உங்கள் கருத்துகளை வாய்மொழியாகவும் எழுத்து வாயிலாகவும் வெளியிடும் திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள்

பேசும்போது மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையோடும் இருங்கள். உள்ளத்தின் கதவுகளைத் திறக்கும் ஆற்றலும் அதை மூடிவிடும் ஆற்றலும் உங்கள் பேச்சில் இருக்கிறது.

நான்கு அங்குல நீளமுள்ள நாக்கு. ஆறு அடி உயரமுள்ள மனிதனையே நொறுக்கிவிடும். பேசாத வார்த்தைகள் என்றும் தீங்கு விளைவிப்பதில்லை.

இறந்து விட்ட காலம் பிறந்து வருவதில்லை. பிறந்துவிட்ட வார்த்தை இறந்துவிடுவதில்லை

ஆகவே நேரத்தையும் காலத்தையும் கவனமாக விழிப்புணர்வோடு கையாளுங்கள்.

**திறந்த மனம்**

எந்தப் பிரச்சனையையும் சவாலையும் திறந்த மனதுடன் அணுகுங்கள் மற்றவர் கருத்துக்கும், புதிய சிந்தனைக்கும் மதிப்புக் கொடுங்கள்.

பிரச்சனை என்பது உங்கள் திறமையைக் காட்டக் கிடைத்துள்ள வாய்ப்பு என்று நினைத்து, பிரச்சனையை அணுகுங்கள். திறந்த மனமே வெற்றியின் விளைநிலம். நிறையப் படிக்கப் படிக்க மனம் விரிவடையும்.

ஆகவே, முன்னேற்ற நூல்களை நிறையப் படியுங்கள் அத்தோடு சிந்தனையாளர்களின் சொற்பொழிவுகளையும் அறிவுரைகளையும் கேட்டு, உங்கள்

இலட்சியத்திற்கு ஏற்றவைகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

சிறந்த முடிவுகளை எடுக்கப் பழகிக்கொள்ளுங்கள் எப்பொழுதும் இலட்சியத்தைப்பற்றியும் அதை அடைவது எப்படி என்பதைப்பற்றியுமே சிந்தித்துச் செயல்பட்டு வாருங்கள்.

வெற்றிப் படிக்கட்டுகளாக உங்கள் முன்னர் இருக்கும் இந்தப் பத்துப் படிகளிலும் முயற்சிச் சிறகுகளை விரியுங்கள். அகன்ற வானம் வசப்படும்.

(சிந்தனைக்கவிஞர் டாக்டர் கவிதாசன் எழுதிய
முன்னேற்றமே மூச்சுக்காற்று என்ற நூலிலிருந்து)

❖❖❖❖❖

## மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : P.ரமேஷ் BE., MBA

பிறந்த தேதி : 06–04–1983. புதன் 05.20 a.m. கள்ளக்குறிச்சி

நட்சத்திரம் : உத்திராடம் 1ம் பாதம், தனுசு ராசி
மீனம் லக்கனம் செவ்வ 2ல்

தந்தை தாய் பெயர் : எம்.பழனிசாமி, நல்லம்மாள்

முகவரி : 641, கொங்கு நகர், நல்லாத்தூர்,
கள்ளக்குறிச்சி tk, விழுப்புரம் Dt

தொழில் : Software Engineer
Verizon, Chennai

கூட்டம் : செம்பொன் குலம், பெரிய மணலி காளியம்மன் கோயில்

தொடர்புக்கு : 9789939013, 94869 24293

| | | | |
|---|---|---|---|
| ல / சூ | சுக் புதன் செவ் | | ராகு |
| | | | |
| | | | |
| கேது சந் | குரு | சனி | |

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : **22–09–1981** செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : **14.19** IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் **2**), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : **1** அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| வருவாய் | : மாதம் சுமார் Rs. 2,50,000/- |
| உயரம் / நிறம் | : **5.6** அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| சொத்து | : பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. **10** கோடி |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :
தந்தை : கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : **98430 79736**
தாய் : திலகவதி செல் : **9047034549**

❖❖❖❖❖